திரு. சோ. அழகர்சாமி: இந்த இரண்டு குளங்களும் நீண்ட நாட்களாக தூர் எடுக்கப்படாமல், கரை உயர்த்தப்படாமல் இருப்பதால் அங்கிருக்கிற ஆயக்கட்டுகளில் நஞ்சை விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறதே, இந்தப் பஞ்ச நிவாரண திட்டத்தின் கீழோ அல்லது வேறு ஒரு திட்டத்தின் கீழோ இந்தக் குளங்களை ஆழப்படுத்த, கரைகளை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு ஏரியை ஆழப் படுத்துவது, கரையை உயர்த்துவது என்றால் அந்த ஏரியின் ஆயக்கட்டுகள் பாதிக்கப்பட்டிருந்தால் ஏரியை ஆழப்படுத்தும் திட்டத்தின் கீழ் இதைக் கொண்டு வரலாம். ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் சொல்லக்கூடிய வேளார் குளம் 14.3 ஏக்கராவுக்கு பாசன வசதி அளிக்கக் கூடியது. அதில் இதுவரை பாதிக்கப் பட்டிருப்பது .63 ஏக்கராதான். அடுத்து உற்பத்தியார் குளம் ஆயக்கட்டை எடுத்துக் கொண்டால் அது 34.95 ஏக்கராவுக்கு பாசனம் அளிப்பது. இதில் .07 ஏக்கராதான் பாசன வசதி பெறுமல் இருக்கிறது என்கிற புள்ளிவிவரம் இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டுமே பாசன வசதியைப் பூரணமாக பெற்றிருக்கிற காரணத்தினல் தற்போது அவை விடப்பட்டிருக்கின்றன.

குறுவை சாகுபடியில் கொள்முதல்

* 289 வினா—**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு குறுவை சாகுபடியில் அரசாங்கம் கொள் முதல் செய்த நெல் எவ்வளவு ?

(இ) கொள்முதலுக்கென தமிழ்நாடு அரசாங்கம் நிர்ணயித் துள்ள விலை என்ன ?

(உ) மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 1974-ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தின்போது, 31—12—1974 வரை, 1,50,132 டன் அரிசியை அரசு கொள்முதல் செய்துள்ளது.

(இ) 25—9—1974 அன்று, மாநில அரசு, கொள்முதல் விலைகளைக் கீழ்க்கண்டவாறு வரையறுத்தது:—

	(குவின்டால் ஒன்றுக்கு)
மிக நேர்த்தி ரகம்	ரூ. 98
நேர்த்தி ரகம்	ரூ. 95
நடுத்தர ரகம்	ரூ. 90
மோட்டா ரகம்	ரூ. 85

(உ) 1974-75-ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில், நெல் கொள்முதல் விலைகளைக் கீழ்க் கண்டவாறு வரையறுக்குமாறு இந்திய அரசு மாநில அரசுக்கு ஆலோசனை நல்கியது.

	(குவின்டால் ஒன்றுக்கு)
மிக நேர்த்தி ரகம்	ரூ. 86
மெல்லிய நேர்த்தியான ரகம்	ரூ. 83
நீண்ட மோட்டா ரகம்	ரூ. 78
குட்டை மோட்டா ரகம்	ரூ. 74

*290 வினா—திரு. கே. எ. வகாப்:

திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல் கொள்முதல் விலையை அதிகமாக நிர்ணயிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், ஒரு குவின்டாலுக்கு என்ன விலை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE: Sir, when it is possible for the State Government to give more amount than what has been fixed by the Centre, will it not be possible for the Government right now to review its entire programme and see to it that a more realistic price is given to the persons from whom paddy is levied so that they will be able to part with their produce properly and they will also get proper price commensurate with the cost of cultivation and they will also be satisfied with it?